## கரூரில் விஜயை காணச் சென்று உயிரிழந்தோர் குடும்பங்களைச் சேர்ந்த 31 பேருக்கு

# த.வெ.க. அரசு வேலை வழங்கியது செல்லாது!

## உயர்நீதிமன்ற மதுரை கிளை அதிரடி உத்தரவு!

## ‘மோசமான முன்னுதாரணம்’ - நீதிபதிகள் கண்டனம்!

மதுரை, ஜூலை.28

**கரூரில் கூட்ட நெரிசலில் சிக்கி பலியானவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த 31 பேருக்கு வழங்கிய அரசு வேலையை ரத்து செய்து உயர்நீதிமன்ற மதுரைகிளை தீர்ப்பளித் துள்ளது. மேலும் த.வெ.க. அரசின் நடவடிக்கை மோசமான முன்னுதாரணம் என்றும் நீதிபதிகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.**

தமிழக வெற்றிக்கழகம் சார்பில் கரூரில் கடந்த செப்டம்பர் மாதம் முதல் அமைச்சர் விஜய் பங்கேற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் நெரிசலில் சிக்கி பெண்கள், குழந்தைகள் உள்பட 41 பேர் உயிரிழந்தனர்.

**31 பேருக்கு அரசு வேலை !**

இந்தச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதுகுறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்தும் படி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த சம்பவம் தொடர்பாக முதல்அமைச்சர் விஜய் உள்பட பலரிடம் சி.பி.ஐ. விசாரணை நடத்தி உள்ளது.

இந்தநிலையில் கரூர் சம்பவத்தில் பலியானவர்களின் 31 பேர் குடும்பத்திற்கு கருணை அடிப்படையில் அரசு வேலைக்கான நியமன ஆணைகளை கடந்த 10 ஆம் தேதி கரூரில் நடந்த விழாவில் முதல் அமைச்சர் விஜய் வழங்கினார்.

இதனை எதிர்த்து நாம் தமிழர் கட்சியின் மீனவர் பாசறை நிர்வாகி தீரன் திருமுருகன், மதுரையைச்சேர்ந்த சீனி முகமது, திண்டுக்கல் மாவட்டம் வேடசந் தூரை சேர்ந்த சந்தோஷ் குமார் ஆகியோர் தனித்தனியாக மதுரை உயர் நீதிமன்ற கிளையில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்குகளை ஏற்கனவே விசாரித்த உயர்நீதிமன்றம், 31 பேர் குடும்பங்களுக்கு வழங்கிய அரசு வேலை நியமனங்கள் தற்காலிகம் என றும், இந்த நீதிமன்றத்தின் இறுதி முடிவுக்கு கட்டுப்பட்டவை எனவும், இந்த பணி நியமனங்களை பெற்றவர்கள் முதல் மாத ஊதியம் பெறுவதற்குள் இந்த விவகாரத்தில் உரிய தீர்வு காணப்படும் எனவும் தெரிவித்து இருந்தது.

மேலும் இந்த வழக்குகள் குறித்து டி.என்.பி.எஸ்.சி. மற்றும் சம்பந்தப் பட்ட துறை அதிகாரிகள் பதில் மனு தாக்கல் செய்ய வேண்டும் எனவும் நீதிபதிகள் உத்தரவிட்டு இருந்தனர்.

**டி.என்.பி.எஸ்.சி. தலையிட முடியாது!**

இந்தநிலையில் இந்த வழக்குகள் நீதிபதிகள் சி.வி.கார்த்திகேயன், சக்திவேல் ஆகி யோர் முன்பு நேற்று முன்தினம் பிற்பகலில் விசாரணைக்கு வந்தது. அப்போது டி.என்.பி.எஸ். சி. சார்பில் தாக்கல் செய்த பதில் மனுவில் கூறியிருந்ததாவது:-



2018ஆம் ஆண்டு பிறப்பிக்கப் பட்ட அரசாணையின்படி கருணை அடிப்படையிலான அரசு பணிகளில் பணியாளர்களை நிரந்தரம் செய்வதற்கு டி.என்.பி.எஸ்.சி.யிடம் அனுமதி கோர தேவையில்லை. மேலும் சம்பந்தப்பட்ட பணி நியமனம் என்பது அரசின் கொள்கை சார்ந்த முடிவு என்பதால் அதில் டி.என்.பி. எஸ். சி. தலையிட முடியாது. இவ்வாறு அதில் கூறப் பட்டு இருந்தது.

அதேபோல வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை செயலாளர் தாக்கல் செய்த பதில் மனுவில், ‘இந்த பணி நியமனங்கள் தமிழக அரசின் கொள்கை முடிவு சார்ந்தவை. இந்த வழக்கு தொடர்ந்தவர்கள், இந்த விவகாரத்தில் எந்த வகையிலும் தொடர்பு இல்லாதவர்கள். அவர்களின் கோரிக்கை ஏற்புடையதல்ல. சட்டப்படி மட்டுமே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே இந்த மனுக்களை தள்ளுபடி செய்ய வேண்டும்’ என கூறப்பட்டு இருந்தது.

**20 லட்சம் பேர் விண்ணப்பம்!**

பின்னர் மனுதாரர்கள் சார் பில் வக்கீல்கள் கிளீட்டஸ், முகமது ரஷீத் உள்ளிட்டோர் ஆஜராகி வாதாடியதாவது:

ஸ்டெர்லைட் துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக் கும், மதுரை லீலாவதி கொலை வழக்கில் அவரது குடும்பத்தில் ஒருவருக்கு அரசு பணி வழங்கப்பட்டுள்ளது என அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. இது ஏற்புடையதல்ல. தமிழ்நாட்டில் பல லட்சம் இளைஞர்கள் உரிய கல்வித்தகுதியுடன் இருந்தும் தகுதியான வேலை கிடைக்காமல் உள்ளனர்.

டி.என்.பி.எஸ்.சி. நடத்தும் சாதாரண குரூப் 4 காலிப்பணியிடங்களுக்குகூட சுமார் 20 லட்சம் பேர் விண்ணப்பிக்கின்றனர். அவ்வாறு இருக்கும்போது ஒரு கட்சியின் பிரச்சார கூட்டத்தில் பங்கேற்று இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு கருணை அடிப்படையில் பணி வழங்குவது என்பது சட்டவிரோதம். மேலும் அர சின் இந்த நடவடிக்கையா னது உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்றங்களின் முந்தைய தீர்ப்புகளுக்கு எதிராக அமைந்திருக்கிறது.

இவ்வாறு அவர்கள் வாதாடினர்.

**மாநில அரசின் தனிப்பட்ட உரிமை!**

பின்னர் தமிழக அரசின் அட்வகேட் ஜெனரல் விஜய் நாராயண் வாதாடியதாவது: கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு மாநில அரசு தலா ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்கியுள்ளது. காயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.2

லட்சம் இழப்பீடு வழங்கப்பட்டு இருக்கிறது. கரூர் பிரசார கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட கொள்கை முடிவாகும். மேலும் இது அரசியலமைப்பு சட்டத்துக்கு உட்பட்டு செயல்படுத்தப் பட்டு உள்ளது. இந்த மறுவாழ்வு திட்டம், சி.பி.ஐ.யின் தற்போதைய விசாரணையையோ அல்லது கோர்ட்டில் நடக்கும் வழக்குகளையோ பாதிக்கும் என்பது ஆதாரமற்ற தகவல். கூட்ட நெரிசலை சமாளிப்பதற்கான முன்னேற்பாடுகளை அப்போதைய போலீஸ் துறையினர் எடுக்காததன் விளைவால்தான் இந்த விபத்து ஏற்பட்டு இருக்கிறது. இதில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் வழங்கப் பட்டு உள்ளது.

மாநில அரசின் கொள்கைமுடிவு என்பது அதன் தனிப்பட்ட உரிமை என உச்சநீதிமன்றம் ஏற்கனவே அளித்த தீர்ப்புகளில் கூறியுள்ளது. அதன் அடிப்படையில் இந்த பணி நியமனங்கள் நடைபெற்றுள்ளன. அதுவும் சாதாரண பணிகள்தான் அளிக்கப்பட்டு உள்ளன. எனவே, மேற்கண்ட ரிட் மனுக்களை தள்ளுபடி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் வாதாடினார்.

**நீதிபதிகள் சரமாரி கேள்வி**

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், ‘அடிக்கடி நடக்கும் பட்டாசு விபத்துகளில் பலர் உயிரிழக்கிறார்களே? அவர்களின் குடும்பத்தினருக்கு இதுபோன்ற நிவாரணம் வழங்கப்படுகிறதா? அரசு பஸ் விபத்தில் உயிரிழப்பவர்கள் குடும்பத்திற்கும் இதுபோல வழங்குவீர்களா? கருணை அடிப்படையில் வேலை பெற பலர் காத்திருக்கும் நிலையில் கரூரில் உயிரிழந்தவர்கள் குடும்பத்திற்கு மட்டும் முன்னுரிமை ஏன்?. அவர்களுக்கு திறன் பயிற்சிகளை வழங்கி வாழ்வாதாரத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கலாமே? என சரமாரியாக கேள்விகளை எழுப்பினர்.

**தீர்ப்பு!**

அனைத்துத் தரப்பு வாதங்களையும் பதிவு செய்து கொண்ட நீதிபதிகள் ‘இந்த வழக்கின் தீர்ப்பை சற்று நேரத்திற்கு ஒத்திவைத்தனர். பின்பு நீதிபதிகள் நேற்று மாலை 5 மணி அளவில் பிறப்பித்த தீர்ப்பில் கூறி இருந்ததாவது:-

கரூர் சம்பவத்தில் இறந்த குடும்பத்தினருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி நடந்த நாளன்று இந்த வழக்குகளை விசாரித்த நாங்கள், இந்த நிய மனங்கள் தற்காலிகமானவை என கூறி இருந்தோம். இந்த வழக்கு விசாரணையின் போது அரசு தரப்பு முன்வைத்த வாதங்கள் ஏற்புடைய தாக இல்லை. கரூர் சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. விசா ரணை நடத்தி வருகிறது இந்த விசாரணையை உச்சநீதிமன்றம் ஏற்படுத்திய குழு கண்காணித்து வருகிறது.

**ஒப்பிடுவது ஏற்படையதல்ல!**

இந்த பணி நியமனங்களை பொறுத்தவரையில் விதிமீறல்கள் உள்ளன. குடிமக்கள் அனைவரையும் அரசு சமமாக பார்க்க வேண்டும்.

ராணுவ வீரர்கள் பணியின் போது இறந்தால் அவர்களது வாரிசுக்கு கருணை அடிப்படையில் வேலை வழங்குவதை அரசு சுட்டிக்காட்டுகிறது. அதுவும் இதுவும் ஒன்றாகாது. அதேபோல் அரசு பணியில் உள்ளவர்களின் குடும்பத்தினருக்கு கருணை அடிப்படையில் பணி வழங்குவதையும், கரூர் சம்பவத்தை யும் ஒப்பிடுவது ஏற்புடையதல்ல.

எதையும் யோசிக்காமல் அரசு வேலை வழங்க முடியாது. கருணை அடிப்படையிலான வேலைகளுக்கு உச்சநீதிமன்றம் பல்வேறு விதிகளை வகுத்துள்ளது. அந்த விதிகளையும் த.வெ.க. அரசு மீறி உள்ளது.

இதுபோன்று கருணை அடிப்படையில் பணி வழங்குவது என்பது ஒரு மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்திவிடும்.

**அரசாணை ரத்து!**

எனவே கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு அரசு வேலை வழங்கிய அரசாணை ரத்து செய்யப்படுகிறது.

இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

---

# பாரம்பரியப் பெருமை மிக்க வில்வித்தை - தேசிய விளையாட்டு ஆகுமா?

## நாடாளுமன்றத்தில் — டி.ஆர். பாலு கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 29-

பல நூற்றாண்டுகளாக வரலாற்றுச் சிறப்புமிக்க விளையாட்டாகத் திகழ்ந்து வரும் வில்வித்தைக்கு உரிய ஊக்கமும் மேம்பட ஆதரவும் அரசு தரவில்லை என்பது உண்மைதானா?



கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த புராதனப் புகழ் பெற்ற வில்வித்தையை பேணி வளர்த்திட அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

வரலாற்றுப்பெருமை மற்றும் புராதனப் புகழ் ஆகியவற்றை கருத்தில் கொண்டு வில்வித்தை விளையாட்டை இந்தியாவின் தேசிய விளையாட்டாக அறிவிக்க ஒன்றிய அரசு முன்வருமா?

2036ஆம் ஆண்டில் சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுகள் இந்தியாவில் நடத்தப்படலாம் என்ற நிலையில் அதில் உயர்ந்த இடங்களை வென்றிட இந்திய அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகள் உத்திகளின் விவரங்கள் என்ன?

என நாடாளுமன்றத்தில் திமுக மக்களவைக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு அவர்கள் வினா எழுப்பினார்.

**விளையாட்டுத்துறை அமைச்சர் பதில்.**

பாரம்பரியப் பெருமை கொண்ட வில்வித்தை விளையாட்டு வளரவும் மேம்பாடு அடைந்திடவும் தேவையான முக்கியத்து வத்தை ஒன்றியஅரசு தர வேண்டும் என்ற நோக்கில் கேட்கப்பட்ட இந்த கேள்விக்கு ஒன்றிய அரசின் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறைக்கான அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா அவர்கள் விரிவான பதிலை நேற்றுமுன் தினம் (27.7.2026 அன்று) மக்களவையில் அளித்தார்.

**“உயர் முன்னுரிமை”யுடன் நிதி உதவி.**

வில் விளையாட்டைப் பொறுத்த வரை அதனை மேம்படுத்தும் முதன்மைப் பொறுப்பு தேசிய அளவிலான அமைப்பான இந்திய வில் வித்தை சங்கத்திடம் (Archery Association of India) தான் உள்ளது. எனினும், ஒன்றிய விளை யாட்டுத் துறை பல் வேறு திட்டங்கள், முயற்சிகள் , உதவிகள் மூலம் இச்சங்கத் தின் செயல் பாடுகளுக்கு துணைபுரிகி றது.

தேசிய விளையாட்டுக் கள் இணையம் (நேஷனல் ஸ்போர்டஸ் ஃபெடரேஷன்) அமைப்புகள் வழியாக வழங்கப்படும் நிதி உதவித் திட்டத்தின் கீழ் வில்வித்தை விளையாட்டுக்கு “உயர் முன்னுரிமை” அடிப்படையில் நிதி அளிக்கப் படுகிறது. இந்திய விளையாட்டு ஆணையத் தால் (ஸ்போர்ட்ஸ் அத்தகாரிட்டி ஆஃப் இந்தியா) கண்டறியப் பட்டுள்ள முக்கிய விளை யாட்டுகளில் வில்வித்தை யும் ஒன்றாகும். இந்த திட்டங்கள் வாயிலாகத் தேர்வு செய்யப்படும் வில்வித்தை விளையாட்டு வீரர்களுக்கு தங்குமிடம், உணவு, திறன்மிக்க பயிற்சியாளர்கள் வாயிலாக உயர்தர அறிவியல் சார்ந்த பயிற்சி, பயிற்சிக்கானகான நவீன கருவிகள், மருத்துவ வசதிகள், ஆடுகள வசதிகளுடனான உயர்ந்த உள்கட்டமைப்பு, போட்டிச்சூழலை உருவாக்கிடும் ஏற்பாடு உள்ளிட்ட அனைத்து வசதிகளும் விளையாட்டு வீரர்களுக்கு அளிக்கப் படுகின்றன.

**2022 முதல் 124 அணிகளின் வில்வித்தைப் போட்டிகள்.**

“கேலோ இந்தியா” திட்டமும் வில்விளையாட்டுக்கு முன்னுரிமை அளிக்கிறது. மேலும், 34 மாநிலங்கள்/ஒன்றிய பிரதேசங்களில் உள்ள கேலோ இந்தியா மாநிலச் சிறப்பு மையங்கள், மொத்தம் 55 கேலோ இந்தியா மையங்கள், மற்றும் 21 கேலோ இந்தியா சான்றளிக்கப்பட்ட அகாடமி களும் வில்வித்தை யை ஏற்றுக்கொள்ளப்பட்ட (Accredited)விளை யாட்டுப் பிரிவாக அறிவித்துள்ளன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக, சென்ற 2022 ஆம் ஆண்டு முதல் நாட்டின் 15 மாநிலங்களில், பெண்கள் குழுக்கள் உட்பட, மொத்தம் 124 வில்வித்தை அணிகளின் போட்டிகள் நடத்தப் பட்டுள்ளது.

ஆசியா மற்றும் ஒலிம்பிக்ஸ் சர்வதேச போட்டிகளில் இந்திய வில்வித்தை பங்கேற்பதை ஊக்குவிக்கும் நோக்கிலும் மகளிருக்கான விளையாட்டு (Sports For Women SFW) முன்னெடுப்பாகவும் இம்முயற்சி மேற்கொள்ளப் பட்டது.

**தேசிய விளையாட்டு அந்தஸ்து பரிசீலனையில் இல்லை**

வில்வித்தையை இந்தியாவின் தேசிய விளையாட்டாக அறிவிப்பது குறித்து ஒன்றிய அரசு தற்போது பரிசீலிக்க படவில்லை.

2036 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள சர்வதேச ஒலிம்பிக்ஸ் போட்டிகளுக்காக இந்திய விளையாட்டு வீரர்களை தயார்படுத்தும் முயற்சிகள் அனைத்தும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒன்றிய விளையாட்டு அமைச்சகம், தேசிய விளையாட்டு இணையங்கள் மற்றும் தேசிய விளையாட்டு ஆணையசத்துடன் நெருக்கமான ஒருங்கிணைப்புடன் பணியாற்றி இந்தியாவின் பல்வேறு பிரிவு விளையாட்டுக் குழுக்களை யும் தனிநபர் விளையாட்டு வீரர்களையும் தயார்படுத்தி வருகிறது. இதற்குத் தேவைப்படும் அனைத்து விதமான உதவிகளையும் ஆதரவையும் அரசு வழங்கி வருகிறது. தனிப்பட்ட வீரர்களுக்கும் அவர்களின் குறிப்பிட்ட விளையாட்டுக்கு உரித்தான சிறப்புத் தேவைகளும் “டார்கெட் ஒலிம்பிக் போடியம் ஸ்கீம் Target Olympic Podium Scheme (TOPS)” என்றழைக்கப்படும் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசினால் வழங்கப் படுகிறது.

ஒன்றிய விளையாட்டுத் துறை அமைச்சர் மன்சுக் மாளவியா தனது பதிலில் இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

---

### கன்னியாகுமரி மேற்கு மாவட்டம்

## தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.பப்புசன் மறைவு!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 29-

கன்னியாகுமரி மேற்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.பப்புசன் (வயது 77) அவர்கள் நேற்று (28.07.2026) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தி அறிந்ததும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

---

### ஓவியர் டிராட்ஸ்கி மருதுவுக்கு — கனடாவின் தமிழ் இலக்கியத் தோட்ட விருது!

## தமிழர் வரலாற்றுக்குப் பெரும் பங்காற்றிய - ஓவியர் டிராட்ஸ்கி மருதுவின் வாழ்நாள் சாதனைகளுக்கு தக்க அங்கீகாரம்!

### வலைதளத்தில் — கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூலை 29-

புகழ்பெற்ற ஓவியர் டிராட்ஸ்கி மருது அவர்களுக்கு, கனடாவில் இயங்கி வரும் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் ‘அ.முத்துலிங்கம் இயல் விருது’ அறிவிக்கப்பட்டுள்ளது.



இச்செய்தியறிந்து உவகையுற்ற கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், டிராட்ஸ்கி மருது அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து வலைதளத்தில், வெளியிட்ட செய்தியில் “தமிழர் வரலாற்றுக்குப் பெரும் பங்காற்றிய ஓவியர் டிராட்ஸ்கி மருது அவர்களின் வாழ்நாள் சாதனைகளுக்கான தக்க அங்கீகாரம் இவ்விருது” என்று குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**“கனடாவில் இயங்கி வரும் தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2025-ஆம் ஆண்டிற்கான ‘அ. முத்துலிங்கம் இயல் விருது’ ஓவியர் டிராட்ஸ்கி மருது அவர்களுக்கு அறிவிக்கப் பட்டிருப்பதற்கு எனது நெஞ்சார்ந்த பாராட்டுகள்.**

**‘நேர்த்தியான கோட்டோவியர்’ என்பதோடு ‘அனிமேஷன்’ எனப்படும் இயங்குபடக் கலை, கணினி வரைகலை ஆகியவற்றிலும் தொடர்ந்து இயங்கி வந்த அவரது ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்ளும் விதத்தில் தமிழ்நாடு அரசு திரைப்பட மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத் தலைவராக நமது ‘திராவிட மாடல்’ அரசில் அவரை நியமித்தோம். 2023 ஆம் ஆண்டு நமது அரசின் செய்தித் துறை வெளியிட்ட இலக்கிய மலரிலும் டிராட்ஸ்கி மருது அவர்கள் பங்களித்திருந்தார்.**

**தமிழ் மன்னர்கள் உண்மையில் எப்படி இருந்திருப்பார்கள் என்பதை வெளிப்படுத்தும் ஆர்வத்துடனும், அதுவரை இருந்து வந்த தவறான மனச்சித்திரங்களைக் கலைத்துப் போடும் வகையிலும் அவர் கொண்டு வந்த ‘வாளோர் ஆடும் அமலை’ போன்ற பங்களிப்புகளால் தமிழர் வரலாற்றுக்கும் அவர் பெரும் பங்காற்றியுள்ளார்.**

**தமிழ் மரபை உலகின் நவீனச் சிந்தனைப் போக்குகளோடு இணைக்கின்ற பாலமாக விளங்கி வரும் ஓவியர் டிராட்ஸ்கி மருது அவர்களின் வாழ்நாள் சாதனைகளுக்கான தக்க அங்கீகாரமாக இவ்விருது அமைவதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.**

இவ்வாறு அந்த வாழ்த்துச் செய்தியில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### நீட்: டெல்லியில் மாணவர்கள் மீது தாக்குதல்!

# சிறப்பு புலனாய்வுக்குழு விசாரணை!

### உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, ஜூலை 29–

நாட்டில் மாணவர்கள் போராடுவதற்கு அனைத்து அரசியல் சாசன உரிமையும் உள்ளது என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. மாணவர்கள் மீதான தாக்குதல் குறித்து விசாரிக்க உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது.

டெல்லி மாணவர் போராட்டத்தில் நடைபெற்ற தாக்குதலை கண்டித்து தொடரப்பட்ட வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, மாணவர்கள் போராடுவதற்கு அனைத்து அரசியல் சாசன உரிமையும் உள்ளது என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது கடும் தாக்குதல் நடைபெற்றுள்ளது என்றும், தாக்குதலில் ஒரு மாணவி படுகாயமடைந்து ஐ.சி.யுவில் உள்ளார் என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. மாணவர்கள் மீது பெல்லட் குண்டுகள், மின்சார கருவிகள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாக புகார் உள்ளதாகவும் நீதிபதிகள் கூறினர்.

பெண்கள், வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்டோர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக உச்சநீதிமன்றம் கவலை தெரிவித்துள்ளது. மாணவர்கள் போராட்டத்தை தடுக்க ஆயுதங்கள் எப்படி பயன்படுத்தப்பட்டது என்பது குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர். போராட்டங்களை கையாள்வது குறித்து உரிய சட்ட வழிமுறைகளை வகுக்க வேண்டிய தருணம் இது என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

நீட் எதிர்ப்பு போராட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள மாணவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாணவர்கள் தாக்கப்பட்ட விவகாரத்தில் டெல்லி, பீகார், உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா, அசாம் ஆகிய மாநிலங்களுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது. சிசிடிவி உள்ளிட்ட அனைத்து ஆவணங்களையும் பாதுகாத்து வைக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது என்றும், மாணவர்கள் மீதான தாக்குதல் குறித்து விசாரிக்க உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்படும் என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.